DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| CC.NO. 1/2014 | | Crime No.: | Station : |
| PW : 6 | LW : 6 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. காளியப்பன் | Caste | |
| Father's Name | ராமசாமி | Calling | |
| Village | நல்லூர் | Religion | |
| Taluk | சத்தியமங்கலம் | Age | 66 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 25.09.2023 |

**(1, 3 எதிரிகள் ஆஜர்)**

**(2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :-**

1. நான் நல்லூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ. 2 பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 – 12 ஆண்டுகளுக்கு முன்பு ஜோதி, பொன்னுசாமி, சாமிநாதன், தேவி ஆகியோர்களுக்கிடையே சண்டை ஏற்பட்டிருந்தது. நான் அப்போது பொன்னுசாமியின் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது அங்கு போலிசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் ஒரு கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து போட்டேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 10.05.2013 ம் தேதி காலை 06.30 மணிக்கு புளியம்பட்டி போலிசர் வந்து உங்கள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் நீங்கள் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்து தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

1. அ.சா. 1, அ.சா. 2 சாட்சிகளின் தந்தை பொன்னுசாமி என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். சண்டை நடந்த மறுநாள் தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் சம்பவம் நடந்த தினமே நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். சண்டை நடந்த தினமே போலிசார் என்னை விசாரித்துவிட்டார்கள் என்றால் சரிதான். சண்டை நடந்த இடத்தை யார் போலிசாரிடம் காண்பித்தது என்றால் அ.சா.1, அ.சா.2 மற்றும் அவரது தந்தை தான் காண்பித்திருக்க வேண்டும். என்னிடம் கையெழுத்து வாங்கிய தாளில் என்ன வரையப்பட்டிருந்தது, எழுதப்பட்டிருந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது, எனக்கு எழுதப்படிக்க தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டதற்காக நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு, நானும் அதில் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை, சம்பவ இடத்தில் தான் கையெழுத்து செய்தேன். நான் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு உறவினர் என்பதால் அவர்களுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் எத்தனை மணிக்கு

கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சம்பவம் நடைபெற்ற தினத்தில் காலை பொழுதில் கையெழுத்து வாங்கினார்கள், நேரம் சரியாக தெரியாது.

**மறுவிசாரணை :** இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| CC.NO. 1/2014 | | Crime No.: | Station : |
| PW : 7 | LW : 8 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. மாதப்பன் | Caste | |
| Father's Name | சித்த பக்தர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 64 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 25.09.2023 |

**(1, 3 எதிரிகள் ஆஜர்)**

**(2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :–**

1. நான் இறுதியாக சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 28.02.2018ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 09.05.2013ம் தேதி புளியம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 21.00 மணிக்கு குரும்பபாளையம், புதுதோட்டத்தில் குடியிருக்கும் பொன்னுசாமி என்பவரின் மகள் லோகநாயகி என்பவரும், அவருடைய தங்கை பூர்ணிமா ஆகியோரும் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று, புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 114/2013, சட்டப்பிரிவுகள் 147, 294(b), 448, 323, 354, 506(i) IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, காயம்பட்ட லோகநாயகி மற்றும் பூர்ணிமா ஆகியோர்களை மருத்துவ நமுனாவின்படி சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி

வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையுடன் புகாரின் அசலை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து, ஒரு நகலை புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டு, 10.05.2013 ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான லோகநாயகி வீட்டின் முன்பு சென்றேன். சம்பவ இடத்தை சாட்சி சரசாள் அடையாளம் காட்ட சாட்சிகள் சௌந்தரராஜன், காளியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்து, மாதிரி வரைபடம் வரைந்தேன். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் குழந்தையம்மாள், சௌந்தரராஜன், காளியப்பன் ஆகியோர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி 1 லோகநாயகி, சாட்சி 2 பூர்ணிமா ஆகியோரை சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வழக்கு வைக்கப்படுகிறது.